



சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் – 2, பொது வாழ்வில் அறமானவர்! தமிழ் வாழ்வில் வரமானவர்! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் 21.2.2025 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, ஆதியப்பா தெரு, ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இப்புகழரங்கத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், இரா.நரேந்திரன், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், எம்.பி.எம்.சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், பி.விஜயகுமார், ராஜேஷ் மேற்கு ஜெயின், பா.ஜெகதீஷ் முன்னிலை வகிக்க, துறைமுகம் கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், டி.சதிஷ்குமார், சேப்பாக்கம்.வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு ஆ.நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்றனர். இம்மாபெரும் புகழரங்கத்தில், கூட்டுறவுத் துறை அமைச்சர், கே.ஆர். பெரியகருப்பன், சொல்வேந்தர் சுகி.சிவம், இரெ.சண்முகவடிவேல், நடிகர் பொன்வண்ணன், மதுக்கூர் ராமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். வட்ட கழக செயலாளர்கள் பா. அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி நன்றி கூறினார்கள்.



சிவகங்கை மாவட்டம், ஆழிமதுரை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தில் பயின்று வந்த சிறுமிகள், பள்ளியின் எதிர்ப்புறம் உள்ள கண்மாய்க்குச் சென்றபோது, எதிர்பாராதவிதமாக இரண்டு சிறுமிகள் கண்மாயில் மூழ்கி உயிரிழந்தனர். அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – அந்த இரண்டு சிறுமிகளின் குடும்பங்களுக்கு நேற்றைய தினம் (20.2.2025) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 லட்சம் ரூபாய்க்கான காசோலையினையும் மற்றும் தனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் ரூபாய்க்கான நிதியுதவியினையும், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் சார்பில் தலா ரூ.1 லட்சம் நிதியுதவிக்கான காசோலையினையும் நேரில் சென்று வழங்கி, ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார் உட்பட பலர் உள்ளனர்.

### கடலூர் மாவட்டம் – திருப்பயரில் இன்று – தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின்

# ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ மண்டல மாநாடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

**கடலூர், பிப். 22-**

**பள்ளிக் கல்வித் துறை சார்பில், இன்று – கடலூர் மாவட்டம் – விருத்தாசலம் – வேப்பூர் அருகில் திருப்பயரில், “தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின்” “பெற்றோரைக் கொண்டாடுவோம்!” மண்டல மாநாடு மிகுந்த எழுச்சியுடன் நடைபெறுகிறது.**

**மாநிலப் பெற்றோர் – ஆசிரியர் கழகத்தின் தலைவரான பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னின்று சிறப்புற நடத்தும் இம்மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றுகிறார்.**

**இம்மாநாடு பற்றிய விவரம் வருமாறு:-**

இந்திய வரலாற்றிலேயே, முதன் முதலாக தமிழகத்தில் ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ மாநாடு நடத்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், பெற்றோர் – ஆசிரியர் கழக மாநில தலைவருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

அதைத்தொடர்ந்து, தமிழகத்தை 7 மண்டலங்களாகப் பிரித்து, மாநாடு நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில், மதுரையில் முதல் மண்டல மாநாடு நடைபெற்றது. இதில், பெற்றோர்கள் ஆயிரக்கணக்கில் ஆர்வமாகக் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் முன்னெடுப்பு!**

அதனைத் தொடர்ந்து, திருச்சி, தர்மபுரி, கோவை, காஞ்சிபுரம், திருநெல்வேலியில் மண்டல மாநாடுகள், பெற்றோர் – ஆசிரியர் கழக நிர்வாகிகள் ஆதரவுடன், வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன. மேலும், அவர்களின் விருப்பத்தின் பேரில், 7 வது மண்டல மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பது இம்மாநாட்டின் சிறப்பாகும்.

இந்த மாநாடுகளில் பெற்றோர் – ஆசிரியர் இடையே நல்லிணக்கம் ஏற்படுவதால், மாணவர்களின் கல்வித் தரம் உயர அது வழிவகை செய்கிறது. மேலும், பள்ளிக் கல்வித் துறைக்கு, தமிழக முதல்வர் 70 திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, மாநாடுகளின் வழியாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.

இந்த மாநாடுகளில் அரசுப் பள்ளிகளுக்கு, பொருள், நிலங்களை நன்கொடையாக வழங்கியவர்கள் கௌரவப் படுத்தப்படுகின்றனர் என்பது மேலும் ஓர் கூடுதல் சிறப்பாகும்.

இந்நிலையில், இன்று, (22.2.2025 - சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் கடலூர் மாவட்டம் – வேப்பூரை அடுத்த திருப்பயரில், ஜெயப்பிரியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி அருகே பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெறும். ‘பெற்றோரைக் கொண்டாடுவோம்’ 7வது மண்டல மாநாடு நடைபெறு கிறது.

தமிழ்நாடு மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக மாநிலத் துணைத் தலவர் பி.வி.பி. முத்துக்குமார் வரவேற்புரையாற்றுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மரு.பி. சந்திரமோகன் திட்ட விளக்கவுரையாற்றுகிறார்.

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரையாற்றுகிறார்.

234/77 கள ஆய்வு காணொலி, தமிழ்நாடு பெற்றோர் – ஆசிரியர் கழக செயலி, விழா மலர் ஆகியவற்றை வெளியிட்டு அரசுப் பள்ளிக் கட்டிடங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுகிறார்.

நிகழ்ச்சிக்கு உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் எம்.கே.விஷ்ணு பிரசாத் எம்.பி., எம்.ஆர். இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் ணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர்,

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு.மா. ஆர்த்தி, அரசு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர்.சுதன், ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் செயலர் முனைவர் வி.சி.இராமேஸ்வர முருகன், தனியார் பள்ளிகள் இயக்கக இயக்குநர் முனைவர் முத்து பழனிசாமி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் திருமதி த.உமா, அரசுத் தேர்வுகள் இயக்கக இயக்குநர் திருமதி ந.லதா, ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் முனைவர் சி.உஷாராணி, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் எஸ்.நாகராஜ முருகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர் செயலர் முனைவர் பெ.குப்புசாமி, ஆசிரியர் தேர்வு வாரிய உறுப்பினர் சா.சேதுராமவர்மா, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி எஸ்.உமா, தொடக்கக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தமிழ்நாடு மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக மாநிலத் துணைத் தலைவர் என்.கே.ஆர். சூரியகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேற்கண்ட 7 மாவட்டங்களைச் சேர்ந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு, விழாவினைச் சிறப்பிக்குமாறு, தமிழ்நாடு மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக மாநில துணைத் தலைவர் முத்துக்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் நன்றி கூறுகிறார்.



நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூ.25.45 இலட்சம் மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா (20.02.2025) அன்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டையும் – தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தையும் சிதைக்கும் – ஒன்றிய கல்வி அமைச்சர்

# தர்மேந்திர பிரதானின் சென்னை வருகையைக் கண்டித்து கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிவிப்பு!

*சென்னை, பிப்.22-*

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.



இது குறித்து செல்வப் பெருந்தகைகூறியதாவது:

கல்வியை யார் அரசியல் ஆக்குகிறார்கள்?. இருமொழி கொள்கையில் கல்வியை படித்தவர்கள் ஏற்கனவே உள்ள சமச்சீர் கல்வி முறையில் படித்தவர்கள் தான் இன்று உலகம் முழுவதும் வல்லுநர்களாகவும், உலகம் போற்றக்கூடிய விஞ்ஞானிகளாகவும், தொழில் அதிபர்களாகவும் வழக்கறிஞர்களாகவும், பொறியாளர்களாகவும் இருக்கின்றனர். என்ன பிரச்சினை இவர்களுக்கு? ஆர்.எஸ்.எஸ். கொள்கை, சித்தாத்தம் என்ன சொல்கிறதோ? அதை திணிக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். ஒரு போதும் அதை தமிழ்நாடு அனுமதிக்காது, தமிழக மக்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் மும்மொழிக் கொள்கையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். இந்தத் தலைமுறைக்கு மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும் வழிகாட்டுகின்ற முதல்வராக இன்றைக்கு அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். ஒன்றிய கல்வி அமைச்சரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதை கைவிட வேண்டும். பா.ஜ.க.வைத் தவிர தமிழகத்தில் யாரும் இந்தத் திட்டத்தை ஆதரிக்கவில்லை. இன்னும் கூட அவர்களுக்கு நெருக்கமாக இருந்த அ.தி.மு.க. கூட இந்தத் திட்டத்தைப் புறக்கணிக்கிறது. அப்படி என்றால் தமிழ்நாட்டு மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் யார்? எதிரானவர்கள் யார்? என்பதை இது காட்டுகிறது.

மும்மொழிக் கொள்கையும், புதிய கல்வி கொள்கையும் தமிழக மக்களுக்கு ஒவ்வாது. ஒரு போதும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். முதல்வர் எடுக்கும் எல்லா முயற்சிக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் உறுதியாக இருப்போம். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் சென்னை ஐஐடிக்கு வரும் போது காங்கிரஸ் சார்பில் அவருக்கு எதிராக கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த திட்ட மிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**தர்மேந்திர பிரதானை முற்றுகையிடுவோம்!**

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

“மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் நிதி தருவோம் என்றும் தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2152 கோடியை இன்று வரை ஒதுக்காமலும், தமிழகத்தையும், தமிழக மாணவர்கள் எதிர்காலத்தையும் சிதைக்கும், ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் சென்னை வருகையை கண்டித்து வருகிற 28ம்தேதி முற்றுகை மற்றும் கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நடைபெறும்” - என்று அவர் கூறியுள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – முன்னிலை! எம்.சுரேஷ் – தலைமை!

# வில்லிவாக்கம் கிழக்கு பகுதி சார்பில் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## எஸ்.கே.ராஜா (எ) சந்திரசேகர் பட்டர் – சிவஸ்ரீ கே. பிச்சை குருக்கள் வழங்குகின்றனர்!

*சென்னை, பிப்.22*

சென்னை கிழக்கு மாவட்ட திமுக வில்லிவாக்கம் கிழக்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 4, தரிசனம் காட்டும் அடியவர் உயர்க! தமிழ்நாடு முதல்வரின் அன்பினில் வளர்க! எனும் தலைப்பில் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகள் இன்று (22.2.2025, சனிக்கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில், சென்னை, அயனாவரம், WPA சௌந்திரபாண்டியன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவை முன்னாள் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எம்.சுரேஷ் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதிமாறன், அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, பகுதி கழக செயலாளர் வே.வாசு.R.கூ.பீ.ஜெயின் எம்.சி, லதாவாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரிஸ்ரீவீரராகவன், வானவில்விஜய், சுதாதீனதயாளன், ஜி.ஜெ. பிரபு முன்னிலை வகிக்கின்றநர். புரசை டி.சம்பத், டி.தாமோதரன், W.அமுல், நா. அறிவுடைநம்பி, எ.வேதா சு.மனோகரன், கே.பாஸ்கர், சிதேவராஜ், காஞ்சி.செ.துரை, ம.ஜெகதீஸ்வரன், டி.ஜானகிராமன், வ.ரமேஷ்பாபு, வி. சபாபதி, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயணன், சி.ஜெய்சங்கர் ப.செந்தில் குமார் எஸ்துரைபாபு கே. ராஜா வி.ஆர்.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் எஸ். கே.ராஜா பட்டர் (எ) சந்திரசேகர் பட்டர், ஸ்தானிகர், சுப்பிரமணிய சுவாமி திருப்பரங்குன்றம், திரு. டாக்டர்.சிவஸ்ரீ கே. பிச்சை குருக்கள் ஆகியோர் அர்ச்சகர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

மேலும் இந்நலத்திட்ட விழாவில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.எ, ப.ரங்கநாதன் Ex.MLA, மாநில நிர்வாகிகள்: கே. எஸ். இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், எம். விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, வே. உமாகாந்த், பரிதிஇளம்சுருதி, எல்.பி.எப்.ஆர்.வரதன், இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர், ஜி.மகா தேவன், எ.புனிதவதிஎத்திராஜ், இசட்.ஆசாத், சி. மகேஷ்குமார், மண்டல குழு தலைவர்கள்: சொ.வேலு, சரிதாமகேஷ் குமார், பா.ஸ்ரீராமுலு. டாக்டர்.ஜி.சாந்தகுமாரி. பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன். டி. எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள்எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம் பி.உதயசங்கள் ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.இரோஹிம்கனி பஏ.பி.பூர்ணிமா அநிர்மலாதேவி இரா.கலைச் செல்வி. மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, நா.துலுக்காணம், எல்.பி.எப்.மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், ராலேஸ் வரிஸ்ரீதர் ஜி.வி.நாகவள்ளி எம்.பெரோஸ்கான் பி.விஜயகுமார் எம்.விநாயகம், கூ.பாடபிரதீப் குமார்கு.கிருஷ்ணமூர்த்தி, சம்பத்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், இரா.வீரமணி ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

97வது வட்ட கழக செயலாளர் விக்னேஷ் சீனிவாசன் நன்றி கூறுகிறார்.